முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2024 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2024-08-10
காலை
[8.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.5** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக..*

**1.1** கீழ்வருவனவற்றுள் இருப்புடன் தொடர்புடைய கிரயமாக அமைவது எது?

(1) கட்டளையிடல் கிரயம் (2) இருப்பின்மைக் கிரயம்

(3) நிறுத்திவைத்தல் கிரயம் (4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.2** ***புளுட்டோ பீஎல்சீ*** 2021 ஏப்ரல் 01 இல் ரூபா 1,200,000/- விலையில் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்திருந்தது. இக்கம்பனி அதன் இயந்திரங்களைத் தேய்மானம் செய்வதற்கு குறைந்து செல்லும் மீதி முறையைப் பின்பற்றுகிறது. இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் :

(1) ரூபா 120,000/-. (2) ரூபா 108,000/-.

(3) ரூபா 97,200/-. (4) ரூபா 87,480/-. (02 புள்ளிகள்)

**1.3** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** வருமானம் (income) என்பது சொத்துக்களின் அதிகரிப்பு அல்லது பொறுப்புக்களின் குறைவினால் உரிமையாண்மையில் ஏற்படும் அதிகரிப்பாகும்.

**(b)** வருமானமானது கம்பனியின் உரிமையாளர்களால் நிதியளிக்கப்படாதது ஆகும்.

**(c)** வருமானமானது வருவாயை (revenue) உள்ளடக்குகிறது ஆயினும் ஆதாயங்களை (gains) அல்ல.

மேலுள்ளவற்றுள், வருமானம் தொடர்பான சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.4** ***நெப்தியூன் பீஎல்சீ*** இன் ஒரு தொழிற்சாலை 2024 ஏப்ரல் 30 இல் இடம்பெற்ற தீவிபத்து காரணமாக அழிவடைந்தது. இதனால் ஏற்பட்ட நட்டம் ரூபா 4,000,000/- ஆகும். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் விநியோகிக்கப்படுவதற்காக 2024 மே 31 இல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தீயினால் ஏற்பட்ட நட்டத்தை எவ்வாறு பிரதிபலிக்க வேண்டும்?

(1) முற்றடக்க வருமானக் கூற்றில் நட்டமானது செலவினமொன்றாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

(2) இது நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படுவதில்லை என்பதுடன் ஒரு வெளிப்படுத்துகை செய்யப்பட வேண்டும்.

(3) இது அடுத்துவரும் நிதியாண்டுடன் தொடர்புடையது ஆதலால், இவ்வாண்டிற்கு எவ்வித சீராக்கமோ அல்லது வெளிப்படுத்துகையோ தேவையற்றது.

(4) கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில், அதை ஒரு செலவினமாகக் கருதுவதை அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதைப் பற்றி சபை தீர்மானிக்கலாம். (02 புள்ளிகள்)

**1.5** 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சண் கம்பனிக்குரிய** கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | **கிரயக் கணக்குகளின்ப (ரூபா)** | **நிதிக் கணக்குகளின்படி (ரூபா)** |
|---|---|---|
| ஆரம்ப இருப்புகள் : | | |
| மூலப்பொருள் | 55,000 | 62,000 |
| முடிவுப் பொருள்கள் | 75,000 | 60,000 |
| இறுதி இருப்புகள் : | | |
| மூலப்பொருள் | 45,000 | 55,000 |
| முடிவுப் பொருள்கள் | 80,000 | 72,000 |

கிரயக் கணக்குகளின்படி இலாபம் ரூபா 352,000/- ஆக இருப்பின், நிதிக் கணக்குகளின்படி இலாபமாக இருக்கக்கூடியது :

(1) ரூ. 346,000/-. (2) ரூ. 342,000/-. (3) ரூ. 358,000/-. (4) ரூ. 362,000/-.

(02 புள்ளிகள்)

**1.6** தொடக்கம் **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.6** ABC கிரயமிடல் என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள்)

**1.7** கீழ்வரும் ஒவ்வொன்றிற்கும் 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாட்டை குறிப்பிடுக :

(i) பங்காளர்களுக்கான ஊதியம்.

(ii) பங்குடமைக்கு மூலதனமிடல்.

(iii) ஒரு புதிய பங்காளரை அனுமதித்தல். (03 புள்ளிகள்)

**1.8** கீழ்வரும் ஒவ்வொரு விடயங்களின் கீழும் கிரயக் கணக்கீடு எதிர் நிதிக் கணக்கீட்டை வேறுபடுத்துக:

(i) நோக்கம் (purpose).

(ii) கொடுக்கல் வாங்கல்களின் அளவு (Coverage of transactions).

(iii) இருப்பு பெறுமதியிடல் (Stock Valuation). (03 புள்ளிகள்)

**1.9** தனிச்சமொன்றின் மூன்று (03) விசேட பண்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.10** **வரையறுக்கப்பட்ட XYZ (தனியார்) கம்பனி,** பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். கீழ்வரும் தகவல்கள் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டுடன் தொடர்புடையவை ஆகும் :

| | ரூபா |
|---|---|
| 2024 சனவரி 01 இலான VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு மீதி | 125,000 |
| விற்பனைகள் (VAT உள்ளடக்கப்படாத) | 990,000 |
| கொள்வனவுகள் (VAT உள்ளடக்கப்படாத) | 360,000 |
| விற்பனைத் திரும்பல்கள் (VAT உள்ளடக்கப்படாத) | 45,000 |

*(அனைத்துக் கொள்வனவுகளும் விற்பனைகளும் வரி விலைப்பட்டியலுடன் ஆதரவளிக்கப்பட்டுள்ளன.)*

பொருத்தமான VAT வீதம் 18% எனின், மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2024 மார்ச் 31 இல் செலுத்த வேண்டிய VAT மீதியைக் கணிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

***சக்தி*** என்பவர் 2024 மார்ச் 01 இல் பற்றிக் ஆடை வணிகமொன்றை ஆரம்பித்தார். அவ்வணிகத்தின் பெயர் ***சக்தி பற்றிக் டிசைன்ஸ்*** என்பதாகும்.

***சக்தி*** அனைத்து காசுச் சேகரிப்புகளையும் வங்கியில் வைப்புச் செய்வதுடன், சகல கொடுப்பனவுகளையும் காசோலை ஊடாக மேற்கொள்கிறார். அத்துடன் அனைத்துப் பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும் காசேட்டில் பதிவு செய்கிறார்.

2024 மார்ச் மாதத்திற்கான **சக்தி பற்றிக் டிசைன்ஸ்** இன் காசேட்டின் பிரித்தெடுப்பு கீழே தரப்பட்டுள்ளது :

**காசேடு (வங்கி நிரல்கள்)**

| திகதி | விபரம் | காசோலை இல. | வரவு (ரூபா) | செலவு (ரூபா) | மீதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01-03-2024 | காசு வைப்பு – **சக்தியின்** ஆரம்ப முதலீடு | | 575,000 | | 575,000 |
| 01-03-2024 | வடிவமைப்பு உபகரணத்தின் கொள்வனவு | 587230 | | 120,000 | 455,000 |
| 01-03-2024 | பற்றிக் கடையின் அலுவலகச் செலவினங்கள் | 587231 | | 26,200 | 428,800 |
| 04-03-2024 | வணிகப் பதிவுச் செலவினங்கள் | 587232 | | 5,300 | 423,500 |
| 04-03-2024 | ஆடைகளின் கொள்வனவுக்கான கொடுப்பனவு | 587233 | | 325,000 | 98,500 |
| 04-03-2024 | பற்றிக் வடிவமைப்புக்கான ஏனைய பொருள்களுக்கான கொடுப்பனவு | 587234 | | 68,300 | 30,200 |
| 11-03-2024 | காசு வைப்பு – விற்பனைகள் | | 320,000 | | 350,200 |
| 16-03-2024 | **சக்தியின்** தனியார் வங்கிக் கணக்கிற்கான வைப்புகள் | 587235 | | 65,000 | 285,200 |
| 17-03-2024 | ஆடைகளின் கொள்வனவுக்கான கொடுப்பனவு | 587236 | | 333,000 | (47,800) |
| 18-03-2024 | காசு வைப்பு – விற்பனைகள் | | 225,000 | | 177,200 |
| 25-03-2024 | காசு வைப்பு – விற்பனைகள் | | 118,500 | | 295,700 |
| 31-03-2024 | வங்கிக் கட்டணங்கள் | | | 2,500 | 293,200 |
| 31-03-2024 | காட்சியறைச் செலவினங்கள் | 587237 | | 8,200 | 285,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் மாதத்துடன் தொடர்புடைய கட்டட வாடகை ரூபா 12,500/- ஆனது 2024 ஏப்ரலில் செலுத்தப்பட்டது.

(2) 2024 மார்ச் 31 இல், முடிவடைந்த (பூர்த்தியடைந்த) ஆடைகளின் இருப்பு ரூபா 244,100/- ஆக இருந்ததுடன் 2024 மார்ச் 31 இல் பற்றிக் ஆடைகளின் புத்துருவாகும் வேலைகள் எதுவுமில்லை.

(3) 2024 மார்ச் 31 இல் மேற்கொள்ளப்பட்ட விற்பனையிலிருந்தான சேகரிப்பு ரூபா 23,500/- ஆனது 2024 ஏப்ரல் 01 இல் வைப்புச் செய்யப்பட்டதுடன், அது காசேட்டில் கவனத்திற் கொள்ளப்பட வில்லை.

(4) வடிவமைப்பு உபகரணமானது கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும் என்பதுடன், உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகளாகும்.

(5) 2024 மார்ச் 31 இல் ஆடைகளின் கொள்வனவு மீது செலுத்த வேண்டிய தொகை ரூபா 45,000/-.

(6) 2024 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 8,000/- ஆனது 2024 ஏப்ரலில் செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

**சக்தி பற்றிக் டிசைன்ஸ்** இற்காக கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான நிகர இலாபம்.

(08 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இலான மூலதன (உரிமையாண்மை) மீதி. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**சரித், சுரித்** மற்றும் **நிஷித்** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2 : 1 : 2 என்ற விகிதத்தில் பகிரும் **CSN Leisure** (சுற்றுலா விடுதி) என்ற பங்குடமையை 2023 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்திருந்தனர்.

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றை வழங்குகிறது :

- பங்குடமையை **நிஷித்** முகாமை செய்வதுடன், அவர் மாதாந்தச் சம்பளம் ரூபா 100,000/- இனைப் பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார்.
- பங்காளர்கள் பங்குடமைக்கு வழங்கிய கடன்கள் மீது 12% வருடாந்த வட்டியைப் பெற உரித்துடையவர்கள்.
- பங்காளர்கள் உள்ளிட்ட ஆரம்ப மூலதனத்திற்கு ஆண்டிற்கு 10% மூலதனம் மீதான வட்டியைப் பெற அவர்களுக்கு உரித்துள்ளது..

(2) **சரித்** இற்குச் சொந்தமான ஒரு பழைய வீடு, சுற்றுலா விடுதியாக மாற்றப்பட்டு, சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதியை வழங்குவதற்காக பங்குடமைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான வாடகையாக மொத்த தங்குமிட வருமானத்தின் 10% இற்குச் சமனான தொகையொன்றைப் பெற **சரித்** உரித்துடையவர். ஆண்டின் காலப்பகுதியில், ஆண்டுடன் தொடர்புடைய வாடகை செலுத்தப்படாததுடன் அது கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(3) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தங்குமிட வருமானம் மற்றும் பங்குடமையின் நிகர இலாபம் முறையே ரூபா 6,000,000/- மற்றும் ரூபா 4,330,000/- ஆகும்.

(4) 2023 ஏப்ரல் 01 இல் **நிஷித்** இனால் பங்குடமைக்கு ரூபா 2,400,000/- கடனொன்று வழங்கப்பட்டதுடன் 2024 ஏப்ரலில் செலுத்தப்பட்ட ஆண்டிற்கான வட்டி இதுவரை கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(5) கீழ்வரும் மீதிகள் பங்குடமையின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

*(ரூபா. '000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| 2023 ஏப்ரல் 01 இல் உள்ளிடப்பட்ட மூலதனம் : | | |
| **சரித்** | | 960 |
| **சுரித்** | | 840 |
| **நிஷித்** | | 1,500 |
| கடன் - **நிஷித்** | | 2,400 |
| ஆண்டின்போதான எடுப்பனவுகள் : | | |
| **சரித்** | 600 | |
| **நிஷித்** | 750 | |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **CSN Leisure** பங்குடமையின் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கு (05 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

இலங்கையிலுள்ள ஒரு தொகுதிச் சூழலியலாளர்கள், இலங்கையிலுள்ள வன விலங்குகளையும் வனங்களையும் பாதுகாப்பதற்காக 2020 ஏப்ரலில் **வனவிலங்குப் பிரியர்கள்** என்ற அமைப்பை உருவாக்கியிருந்தனர்.

**வனவிலங்குப் பிரியர்கள்** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2023 ஏப்ரல் 01 இல் 53 அங்கத்தவர்கள் இந்த அமைப்பில் இருந்தனர். அதில், 2023 மார்ச் 31 இல் மொத்தமாக 5 அங்கத்தவர்கள் 2023/24 ஆம் ஆண்டு உள்ளிட்ட அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான தமது அங்கத்துவச் சந்தாக்களைச் செலுத்தியிருந்தனர். 2024 மார்ச் 31 இல் 3 அங்கத்தவர்கள் 2023/24 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவச் சந்தாக்களைச் செலுத்தியிருக்கவில்லை. 2023/24 ஆம் ஆண்டில் மொத்தமாக 12 புதிய அங்கத்தவர்கள் 2023/24 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாக்களைச் செலுத்திய பின்னர், **வனவிலங்குப் பிரியர்கள் அமைப்பில்** இணைந்து கொண்டனர். அங்கத்தவர் ஒருவருக்கான அங்கத்துவக் கட்டணமானது ஆண்டிற்கு ரூபா 15,000/- என்ற ஒரு நிலையான கட்டணமாக இருக்கிறது. 2023 ஏப்ரல் 01 இல் அங்கத்துவச் சந்தா நிலுவைகள் எதுவுமில்லை.

(2) **வனவிலங்குப் பிரியர்கள் அமைப்பானது** வனவிலங்குகள் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவூட்டுவ தற்காக 2023 ஆகஸ்ட் மாதம் கொழும்பில் கண்காட்சியொன்றை நடத்தியது. கண்காட்சியைப் பார்வையிட நுழைவுக் கட்டணம் இல்லை. கண்காட்சித் தொகையான ரூபா 50,000/- இற்கு அனுசரணை கிடைத்திருந்தது. அதற்கு மேலதிகமாக, கண்காட்சியின்போது புகைப்படங்கள் மற்றும் அங்கத்தவர்களின் வெளியீடுகளை விற்பனை செய்ய முடிந்திருந்ததுடன், அதன் மூலம் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 1,500,000/- ஆகும். புகைப்படங்கள் மற்றும் வெளியீடுகளின் விற்பனையிலிருந்து சேகரிக்கப்பட்ட தொகையில் 10% ஆனது அமைப்பிலுள்ள அந்தந்த அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் மீதி 90% ஆன தொகை **வனவிலங்குப் பிரியர்கள் அமைப்பிலேயே** வைத்திருக்கப்பட்டது.

(3) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வனவிலங்குப் பிரியர்கள் அமைப்பின்** செலவினங்களது பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

*(ரூபா '000)*

| | |
|---|---:|
| வாடகைச் செலவினங்கள் | 1,300 |
| விளம்பரப்படுத்தல் செலவினங்கள் | 240 |
| நிருவாக உதவியாளருக்கான சம்பளங்கள் | 360 |
| மின்சார மற்றும் நீர்க் கட்டணங்கள் | 8 |
| அச்சிடுதலும் காகிதாதியும் | 50 |

(4) **வனவிலங்குப் பிரியர்கள் அமைப்பு** கொழும்பிலுள்ள கட்டடமொன்றில் இயங்குகிறது. கட்டடத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 30,000/- ஆகும். மீதமுள்ள வாடகைச் செலவினமானது கண்காட்சி மண்டபத்துடன் தொடர்புடையதாகும்.

(5) விளம்பரப்படுத்தல் செலவினமானது முற்றுமுழுதாக கண்காட்சி தொடர்பில் செலவிடப்பட்டிருந்ததுடன் 10% அச்சிடுதல் மற்றும் காகிதாதிகளுக்கான கிரயமும் இதற்காகவே செலவிடப்பட்டிருந்தது.

(6) **வனவிலங்குப் பிரியர்கள் அமைப்பு** தொடக்கத்திலேயே மொத்தக் கிரயம் ரூபா 500,000/- இல் 2 மடிக்கணினிகளை கொள்வனவு செய்திருந்தது. மடிக்கணினிகள், கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வனவிலங்குப் பிரியர்கள் அமைப்பின்** கீழ்வருவன வற்றைத் **தயாரிக்குக** :

(a) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கு. (04 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு. (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **வரையறுக்கப்பட்ட பப்றிக் மால் (தனியார்) கம்பனி** என்பது ஓர் ஆடைத் தயாரிப்பு நிறுவனமாகும். இது ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமையைப் பயன்படுத்துகிறது.

கீழ்வரும் மீதிகள் கணக்கீட்டு முறைமையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| **இருப்பு** | **2024 மார்ச் 01 இல் (ரூபா)** |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு | 950,750 |
| புத்துருவாகும் வேலை (WIP) இருப்பு | 275,600 |
| முடிவுப்பொருள் இருப்பு | 1,850,300 |

2024 மார்ச் மாதத்தில் கீழ்வரும் ஊடுசெயல்கள் மேற்கொள்ளப்பட்டன :

| | **ரூபா** |
|---|---|
| கடனடிப்படையில் மூலப்பொருள்களின் கொள்வனவு | 2,300,000 |
| உற்பத்திக்காக வழங்கப்பட்ட பொருள்கள் | 1,550,000 |
| உற்பத்தி மீதான நேர் கூலிகள் | 700,000 |
| உற்பத்தி மேந்தலைக் கிரயம் | 350,000 |
| முடிவுப் பொருள்களின் உற்பத்திக் கிரயம் | 2,800,000 |
| விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் கிரயம் | 2,450,000 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வரும் கணக்குகளைத் **தயாரிக்குக** :

(a) மூலப்பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு. (02 புள்ளிகள்)

(b) WIP கட்டுப்பாட்டுக் கணக்கு. (03 புள்ளிகள்)

(c) முடிவுப்பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு. (02 புள்ளிகள்)

(B) கீழ்வரும் தகவல்கள் பணி இல. **A10000** தொடர்பில் **வரையறுக்கப்பட்ட ABC** கம்பனியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன **:**

| | |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 7,500 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 400/- அடிப்படையில் |
| நேர் கூலி – பிரிவு A | 250 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 1,500/- அடிப்படையில் |
| – பிரிவு B | 500 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 750/- அடிப்படையில் |
| உற்பத்தி மேந்தலை | மொத்த நேர் கூலிக் கிரயத்தில் 80% |

கம்பனி, விற்பனை விலையில் 20% இலாபத்தைப் பேணுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

பணி இல. **A10000** மீது விதிக்கப்பட வேண்டிய விலையைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) **வரையறுக்கப்பட்ட மூன் கம்பனி** அதன் உற்பத்திக்கான **மூலப்பொருள் A** இனை அலகொன்று ரூபா 60/- விலையில் வெளி வழங்குநர் ஒருவரிடமிருந்து வாங்குகிறது. **மூலப்பொருள் A** தொடர்பான கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

- **மூலப்பொருள் A** இற்கான வருடாந்தக் கேள்வி 6,400 அலகுகளாகும்.
- ஆண்டொன்றிற்கான ஓர் அலகு மூலப்பொருளின் களஞ்சிய வசதி மீதான வாடகை மற்றும் காப்புறுதிக் கிரயம் ரூபா 2/- ஆகும்.
- கட்டளை ஒன்றைச் செய்வதற்கான கிரயம் ரூபா 100/- ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

**மூலப்பொருள் A** இற்கான கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ). (03 புள்ளிகள்)

(b) செய்யப்பட வேண்டிய கட்டளைகளின் உத்தம (optimum) எண்ணிக்கை. (02 புள்ளிகள்)

(B) ஊழியர் ஒருவர் தொடர்பான கீழ்வரும் கூலி விபரங்கள் **வரையறுக்கப்பட்ட மூன் கம்பனியின்** பதிவுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| மணித்தியால கூலி வீதம் | ரூபா 200/- |
| ஒரு துண்டிற்கு எடுக்கும் சாதாரண நேரம் | 24 நிமிடங்கள் |
| வாரத்திற்கான உண்மையான வெளியீடு | 120 துண்டுகள் |
| வாராந்த வேலை மணித்தியாலங்கள் | 40 மணித்தியாலங்கள் |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மணித்தியால கூலி வீதத்தின் 150% இல் சேமிக்கப்பட்ட நேரம் மீது மிகையூதியத்தைப் (bonus) பெறுவதற்கு ஊழியர் உரித்துடையவராக இருப்பின், ஊழியரின் வாராந்த சம்பாத்தியத்தைக் (weekly earnings) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

2024 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட C-லங்கா (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

*(ரூபா)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) | | 1,000,000 |
| 2023 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 5,269,000 |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 12,000,000 | |
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 2,550,000 | |
| **2023 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :** | | |
| மோட்டார் வாகனங்கள் | | 6,000,000 |
| அலுவலக உபகரணம் | | 1,020,000 |
| வங்கிக் கடன் | | 4,650,000 |
| வங்கியிலுள்ள காசு | 4,937,000 | |
| வியாபார வருமதிகள் | 6,140,000 | |
| வியாபார சென்மதிகள் | | 726,000 |
| விற்பனைகள் | | 32,865,000 |
| விற்பனைக் கிரயம் | 13,146,000 | |
| செலுத்திய அலுவலக வாடகை | 633,000 | |
| எரிபொருள் செலவினங்கள் | 431,000 | |
| விளம்பரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினங்கள் | 729,000 | |
| விற்பனைத் தரகு (பணிசை) | 978,000 | |
| நீர் மற்றும் மின்சாரம் | 132,000 | |
| அலுவலகப் பராமரிப்பு | 357,000 | |
| சம்பளங்கள், EPF மற்றும் ETF | 9,395,000 | |
| வங்கிக் கட்டணங்கள் | 15,000 | |
| வங்கிக் கடன் வட்டி | 674,000 | |
| ஏனைய நிருவாகச் செலவினங்கள் | 97,000 | |
| 2023 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகளுக்கான ஏற்பாடு | | 208,000 |
| செலுத்திய வருமான வரி | 625,000 | |
| செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF | | 12,000 |
| மோட்டார் வாகன அகற்றல் கணக்கு | | 3,525,000 |
| 2024 மார்ச் 31 இல் தொக்கு | 2,436,000 | |
| | **55,275,000** | **55,275,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது. பின்னர், தொக்குகளில் மூன்றில் ஒரு பகுதி சேதமடைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதால், அந்தத் தொக்குகள் 2024 ஏப்ரலில் கிரயத்தில் 50% கழிவுடன் விற்பனை செய்யப்பட்டன. எவ்வாறாயினும், இது தொடர்பான சீராக்கங்கள் எதுவும் கணக்கேடுகளில் செய்யப்படவில்லை.

(2) 2023 ஏப்ரல் 01 இலிருந்து, தற்போதுள்ள அலுவலக வளாகம் ரூபா 25,000/- மாதாந்த வாடகையில் பெறப்பட்டிருந்தது. மேலும், கம்பனியானது 2024 சனவரி 01 இலிருந்து ரூபா 37,000/- என்ற மாதாந்த வாடகையில் 05 ஆண்டுகளுக்கு ஒரு புதிய விற்பனை அலுவலகத்தை வாடகைக்கு எடுத்திருந்தது. மாதாந்த வாடகைக்கு மேலதிகமாக, புதிய விற்பனை அலுவலகத்திற்காக 6 மாதங்களுக்கான வாடகையானது முற்பணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. கம்பனி அனைத்து வாடகைகளையும் பூரணமாகத் தீர்ப்பனவு செய்துள்ளதுடன், செலுத்திய அலுவலக வாடகைக் கணக்கில் வரவுப் பதிவு செய்துள்ளது.

(3) பொறி மற்றும் உபகரணங்கள், கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும் என்பதுடன் சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 5 ஆண்டுகள் |

(4) 2022 சனவரி 01 இல் ரூபா 4,000,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு வாகனம் 2023 டிசெம்பர் 31 இல் ரூபா 3,525,000/- விற்பனை செய்யப்பட்டதுடன் ஒட்டுமொத்த விற்பனை வருமானமும் மோட்டார் வாகன அகற்றல் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டது. இது தவிர, கணக்கேடுகளில் வேறு எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) 2024 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 13,000/- ஆக இருந்ததுடன் அது 2024 ஏப்ரல் நடுப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

(6) கம்பனி வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான அதன் வருமான வரிப் பரிப்பாக ரூபா 827,000/- இனை மதிப்பிட்டிருந்தது. அதில், ரூபா 625,000/- இனை காலாண்டுத் தவணைக் கட்டணமாக ஆண்டின்போது செலுத்தியிருந்தது.

(7) 2024 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியின் 5% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேணுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(8) 2024 மார்ச் 31 இல், ரூபா 1,000,000/- தொகையை பொது ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(9) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2024 மே 31 இல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப் பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட C-லங்கா (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக :

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (13 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |